<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 142/2019 | சாட்சி | வா.சா.4 |
| பெயர் | வெங்கடேசன் | நாள் | 13.09.2024 |
| தகப்பனார் பெயர் | பையாலு | | |

<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.4 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>

4) வாதியின் வீட்டிற்கான வரிவிதிப்பு எண் குறித்து நகராட்சி வசம் உள்ள ஆவணங்களை பார்வையிட்டு, தெரிந்து கொண்டேனா என்றால், தெரிந்து கொண்டேன். வரிவிதிப்பு ஆவணங்களின் படி கதவு எண் என்னவென்றால், க.எண்.33A ஆகும். வரிவிதிப்பு எண் என்னவென்றால், பழைய எண்.047/20863 ஆகும். புதிய வரிவிதிப்பு எண்.047/013/900580 ஆகும்.

5) மேற்படி பழைய எண்.047/20863 யார் பெயரில் உள்ளது என்றால், S.தேவகி, க/பெ.S.கோவிந்தன் என்பவரது பெயரில் உள்ளது. வாதி பெயரில் தாவா சொத்திற்கு என்ன வரிவிதிப்பு உள்ளது என்றால், குடிநீர் இணைப்பு எண் மட்டும் உள்ளது. எந்த பெயரில் வாதி பெயரிலிருந்து மேற்படி வரிவிதிப்பு தேவகி என்பவரது பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால், அதுகுறித்து ஆவணங்களை பரிசீலித்தால்தான் கூற இயலும். அதற்கான ஆவணங்கள் தற்போது கைவசம் இல்லை.

6) நகராட்சி விதிகளின் படி அரையாண்டுக்கு ஒரு முறை வரிவிதிப்பு செய்யப்படும் என்றால், சரிதான். அவ்வாறு வரி செலுத்தப்பட்ட ரசீதுகளை நகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்துவிடுவோம் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் 2016 ம் வருடம் முதல் 2023ம் வருடம் வரை அவ்வாறு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட மேற்படி தேவகியின் பெயரிலுள்ள சொத்து வரி செலுத்தப்பட்டதற்கான ரசீதுகள் என்றால், அது தொடர்பான அலுவலரிடம் உள்ள ஆவணத்தை பரிசீலித்தால் தான் கூற இயலும். தற்போது நான் மேலே சாட்சியம் அளித்துள்ள மேற்படி பழைய வரி எண்ணும், புதிய வரி எண்ணும் மேற்படி இணையதள பதிவேற்ற ரசீதுகளுடன் ஒத்துப்போகிறது என்றால், சரிதான். தற்போது என் வசம் உள்ள வரி ரசீது எந்த வருடம் செலுத்தப்பட்டது என்றால், 2024 – 2025 ற்குரிய இரண்டாம் அரையாண்டுக்கு உரியது.

7) நடப்பு அரையாண்டிற்குரிய வரி எவ்வளவு விதிக்கப்பட்டுள்ளது என்றால், ரூ.793/- விதிக்கப்பட்டுள்ளது. இதுவரை வாதி பெயரிலோ, அவரது மகள் தேவகி பெயரிலோ பிரச்சனையில் உள்ள சொத்திற்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்க வேண்டி ஏதேனும் மனு நகராட்சியில் அளிக்கப்பட்டுள்ளதா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியவில்லை.

8) ஏற்கனவே பாதாள சாக்கடை இணைப்பு வழங்கப்பட்டிருந்தால் அதற்கான டெபாசிட் தொகை உரிய நபர்களால், நகராட்சிக்கு செலுத்தப்பட்டிருக்கும் என்றால், சரிதான். தவணை முறையிலும் செலுத்தப்படலாம். அவ்வாறு வாதியோ, அவரது மகளோ பாதாள சாக்கடை இணைப்பு வேண்டி ஏதேனும் தொகை வைப்பீடு செய்திருந்தாலோ அல்லது தவணை முறையில் செலுத்தியிருந்தாலோ அதற்கான ஆவணங்கள் நகராட்சியில் இருக்கும் என்றால், சரிதான்.

9) பொதுவாக ஒரே கதவு எண்ணுக்கு ஒரே வரிவிதிப்பு எண்ணிற்கு இரண்டு நபர்கள் பெயரில் வரிவிதிப்பு செய்ய இயலாது என்றால், அதுகுறித்து தெரியவில்லை. நான் தாவா சொத்தை பார்வையிட்டபோது எந்த பகுதியில் பார்வையிட்டேன் என்றால், வடக்கு பகுதியில் பார்வையிட்டேன். மேற்படி வடக்கு பகுதியில் ஏதேனும் தெரு அமைந்துள்ளதா என்றால், பிரதிவாதியின் வீட்டை ஒட்டி அமைந்துள்ளது. மேற்கு புற பகுதியில் பிரச்சனையிலுள்ள சந்திற்கு செல்லும் வழி மேற்குபுறமாக பூட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். எவ்வாறு நான் பார்வையிட்டேன் என்றால், பிரதிவாதியிடம் கூறி மேற்படி சந்தை திறக்க சொல்லி பார்வையிட்டேன்.

10) தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 புகைப்படத்தில் கண்டுள்ளவாறுதான் மேற்படி சந்து அமைந்துள்ளது என்றால், சரிதான். அதன் கிழக்குபுறமாக மதில்சுவர் வைத்து அடைக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி கிழக்குபுறத்திலிருந்து நேரடியாக சந்திற்கு வரஇயலாது என்றால், சரிதான். நான் பார்வையிட்டபோது பாதாள சாக்கடை குழாய் ஏதேனும் நிலையில் இருந்ததா என்றால், குழாய் எதுவும் இல்லை. ஆனால், முன்பு குழாய் இருந்து அகற்றப்பட்டதற்கான சுவடுகள் காணப்பட்டது.

11) அவ்வாறு அகற்றப்பட்டதாக நான் சொல்லும் குழாய் இணைப்பு பிரதிவாதியின்

வீட்டிலிருந்து வருகிறது என்றால், சரிதான். மேற்படி வாதி மற்றும் பிரதிவாதியின் வீடுகளுக்குள் சென்று அவ்வாறு ஏதேனும் பாதாள சாக்கடை இணைப்பு அகற்றப்பட்டுள்ளதா என்பதை நான் பார்த்தேனா என்றால், இல்லை. அதனால் மேற்படி கழிவு நீர் குழாய் யார் வீட்டிலிருந்து வருகிறது என்பது குறித்து என்னால் உறுதியாக சொல்ல இயலாது என்றால், சரிதான்.

12) மேட்டூர் நகராட்சி ஒருபோதும் பஞ்சாயத்தாகவோ, பேரூராட்சியாகவோ, தேர்வுநிலை பேரூராட்சியாகவோ இருந்ததில்லை என்றால், அதுகுறித்து எனக்கு சரியாக தெரியவில்லை. மேட்டூர் நகராட்சி முதலில் நகரியமாக இருந்து பின்னிட்டு நகராட்சியாக அமைக்கப்பட்டது என்றால், சரிதான்.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.